**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 122/2018**

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22–ம் நாள் வெள்ளிக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 22.082025 | தகப்பனார் பெயர்: | லட்சுமணன் |
| பெயர்: | கவிமன்னன்<br>(DW–1 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | திருமுல்லைவாசல் | சமயம்: | |
| தொழில்: | | வயது : | 55/2025 |

<u>**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : 22.08.2025**</u>

**(ஆரம்பித்த நேரம்– 13.58)**

1. தாவா சொத்து என்பது எத்தனை அட்டவனை சொத்திற்கு என்றால் பட்டா இடம் மற்றும் கோயில் இடத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கோயில் இடத்திற்கான சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. கோயில் இடம் என்பது சீர்காழியிலிருந்து திருமுல்லைவாசல் செல்லும் மெயின்ரோட்டில் சீர்காழி டவுனில் உள்ளது என்றால் சரிதான். கோயில் இடத்தின் விஸ்தீரணம் என்பது 3 ஏக்கர் 30 சென்ட் என்றால் சரிதான், அதில் கூறை வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டின் கதவு எண் 7/NA என்றால் அந்த இடம் நீர் இறைக்கும் இன்ஜின் கொட்டகையாக பயன்படுத்தப்பட்டது.

2. கதவு எண் 7/NA என்ற இடத்தில்தான் வாதிகள் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். 1ம் வாதி 2ம் வாதியின் மனைவி என்றால் சரிதான். 1ம் வாதியின் தகப்பனார் தான் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் மனைவி பெயர் சீதா என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி மற்றும் சீதாவிற்கு பிறந்த பெண் குழந்தைகள் தான் 1ம் வாதி, 4, 5 பிரதிவாதிகள்

என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி மற்றும் சீதாவிற்கு பிறந்த ஆண் குழந்தைகள் தான் நான், 3ம் பிரதிவாதி மகேந்திரன் ஆவோம் என்றால் சரிதான். எனது தாயார் இறந்துவிட்டார். வழக்கு நிலுவையில் இருக்கும்போது 3ம் பிரதிவாதி மகேந்திரன் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி லட்சுமணனும் வழக்கு நிலுவையில் இருக்கும்போது இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி கோயில் சொத்து என்பது சட்டநாதர் சுவாமி கோயிலுக்கு சொந்தமானது என்றால் சரிதான்.

3. மேற்படி கோயில் சொத்தின் குத்தகை உரிமை பதிவேடு எனது தாயார் சீதாவின் பெயரில் இருந்தது என்றால் சரிதான். எனது தகப்பனார் லட்சுமணன் கடந்த 1989ம் வருடம் தாவா பட்டா சொத்தை ராமானுஜம் என்பவரிடமிருந்து கிரயம் வாங்கினார் என்றால் சரிதான். எனது தகப்பனார் சிங்கப்பூர் குடியுரிமை பெற்றவர் என்றால் சரிதான். எனது தகப்பனார் சிங்கப்பூரில் இருந்த காரணத்தால் எனது தாயார் சாகுபடி செய்ய இயலாமல் தாவா A, B சொத்துக்களை சம்மந்தம் என்பவரிடம் 02.05.1992 தேதியில் ஒரு வருடத்திற்கு குத்தகைக்கு விட்டிருந்தார் என்றால் சரிதான். அதன்பிறகு சம்மந்தம் சீதாவிடம் தாவா A, B சொத்துக்களை ஒப்படைத்துவிட்டார் என்றால் சரிதான். அதன்பிறகு கோயில் சொத்தை மேற்படி சீதா என்பவர் 1ம் வாதியிடம் வாய்மொழியாக உள்குத்தகைக்கு விட்டுவிட்டார் என்றால் சரியல்ல, தங்குவதற்காக இடம் கொடுக்கப்பட்டது. கடந்த 1995ம் வருடத்திலிருந்து கோயில் சொத்து 1ம் வாதியின் வசத்திலும் உரிமையிலும் உள்ளதால் அவர்தான் அதற்கான குத்தகையை செலுத்தி வருகிறார் என்றால் சரிதான். அந்த இடத்திற்கு மின் இணைப்பு பெற்று மின் கட்டணம் 1ம் வாதி செலுத்தி வருகிறார் என்றால் நாங்கள் அதற்கு அனுமதி கொடுக்கவில்லை.

4. B ஷெடியூல் சொத்தை மேற்படி சீதா என்பவர் 1ம் பிரதிவாதியுடன் சேர்ந்து 2ம் வாதியிடம் 1995ம் வருடம் குத்தகைக்கு கொடுத்தார் என்றால் இல்லை, பார்த்துக்கொள்ள சொல்லி கொடுக்கப்பட்டது. B ஷெடியூல் சொத்தை

2ம் வாதி 1995ம் வருடத்திலிருந்து வசம் எடுத்து அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். தாவா B ஷெடியூல் சொத்திற்கு 2ம் வாதி கரும்பு சாகுபடி செய்ததற்காக தலைஞாயிறு கூட்டுறவு சர்க்கரை ஆலையிடம் அனுமதி சீட்டு பெற்று சாகுபடி செய்திருக்கிறார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 என்பது 1ம் வாதி கோயிலுக்கு குத்தகை செலுத்தியதற்கான ரசீது என்றால் சரிதான். தாவா A ஷெடியூல் சொத்தில் 1ம் வாதி குத்தகை உரிமை அனுபவிப்பதை பொறுத்து எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான்.

வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**(முடிவு நேரம்– 14.33)**